உளுந்தூர்பேட்டை - எம்.குன்னத்தூர் மேல்நிலைப் பள்ளிக்கு

# இந்த நிதியாண்டில் முன்னுரிமை வழங்கி கட்டிடங்கள் கட்டித் தரப்படும்!

## சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பதில்!



**சென்னை,மார்ச்.24-**

**சட்டப் பேரவையில் உளுந்தூர் பேட்டை தொகுதி கழக உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன் எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அளித்த பதிலும் வருமாறு:**

**ஏ.ஜெ.மணிக்கண்ணன்:** உளுந்தூர்பேட்டை தொகுதி, எம்.குன்னத்தூர் கிராமத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியோடு விடையளிக்கிறேன்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, M.குன்னத்தூர் கிராமத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் 674 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 29 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இப்பள்ளியில் 2 மேல்நிலை ஆய்வகங்கள் உள்ளன. உயர்நிலைப்பள்ளிக்கென புதிய ஆய்வகம் கோரப்பட்டுள்ளது. மேலும் இப்பள்ளிக்கு 8 வகுப்பறை கட்டடங்கள் மற்றும் 4 கழிப்பறைகள் கூடுதலாக தேவைப்படுகின்றன. 2025-2026 ஆம் கல்வியாண்டில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நபார்டு வங்கி மூலம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, இப்பள்ளிக்கு கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஏ.ஜெ. மணிக்கண்ணன்:** அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை தொகுதியில், இப்பிரச்சினை நீண்டகாலமாக இருந்து வந்தது. அப்பள்ளிகளுக்குத் தேவையான இடமும் வழங்கி, பள்ளிக் கட்டடத்தை கட்டி தந்தமைக்கு முதலமைச்சர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும், பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அரசினர் மேல்நிலைப் பள்ளி செங்குறிச்சி, அரசினர் உயர்நிலைப் பள்ளி இருந்தை, அரசினர் உயர்நிலைப் பள்ளி பின்னல்வாடி, அரசினர் உயர்நிலைப் பள்ளி காட்டு எடையார் ஆகிய கிராமங்களிலுள்ள பள்ளிகளுக்குத் தேவையான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த பள்ளிகளுக்கும் இந்த ஆண்டு கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், முழுமையான கட்ட வசதி இல்லாமல் மாணவர்கள் வெளியில் அமர்ந்து படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

அதைக் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 7,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொடர்ந்து ஒவ்வோராண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடங்கள் ஆங்காங்கே தொடர்ந்து கட்டப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. குறிப்பாக, கள்ளக்குறிச்சி மாவட்டம் என்று எடுத்துக்கொண்டால், இதுவரை வகுப்பறைகள் 395, ஆய்வகங்கள் 63, கழிவறைகள் 10 units, சுற்றுச் சுவர் 90 மீட்டர் என்று இதுவரை கட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் உளுந்தூர்பேட்டை தொகுதியை எடுத்துக்கொண்டால், வகுப்பறைகள் 109, ஆய்வகங்கள் 3, கழிவறைகள் 3 units என்று இதுவரை கட்டப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து அவர் குறிப்பிட்ட அந்த மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான கட்டட வசதிகள், கண்டிப்பாக இந்த நிதியாண்டில் எங்களுடைய Chief Educational Officers and Head Masters மூலமாக பெறப்படும் கருத்துகளின் அடிப்படையில், அவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஏற்படுத்தித் தரப்படும் என்பதை தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஏ.ஜெ. மணிக்கண்ணன்:** பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் தொகுதியில், திருநாவலூர் மற்றும் களமருதூர் பகுதியில் ‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் மகளிர் உயர்நிலைப் பள்ளிகள் வேண்டுமென்று முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. பேரூராட்சி அந்தஸ்தில் உயர்வதற்குத் தேவையான வசதிகள் குறித்தும் முன்மொழிவுகள் வரப்பெற்றிருக்கின்றன. அங்கே அவ்வப்போது சிறு சிறு சட்டம் - ஒழுங்குப் பிரச்சினைகள் வருவதன் காரணமாக, இந்த ஆண்டு பெண்கள் உயர்நிலைப் பள்ளி பிரித்துத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** தரம் உயர்த்துவது குறித்து பல்வேறு விதமான கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அவற்றை கண்டிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதியமமைச்சருடன் கலந்தாலோசித்து, இந்தாண்டு எத்தனை பள்ளிகளைத் தரமுயர்த்த முடியுமோ, அந்தளவிற்கு தரம் உயர்த்துவதற்கான முழு ஏற்பாடுகளையும் செய்வோம் என்பதை தங்களின் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில்

# ராஜபாளையம் நகர்ப் பகுதியில் திருமண மண்டபம் கட்டித் தாரீர்!

## சட்டப் பேரவையில் – எஸ்.தங்கபாண்டியன் எம்.எல்.ஏ. கோரிக்கை!



சென்னை,மார்ச்.24-

“ராஜபாளையம் நகர்ப் பகுதியில் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் திருமண மண்டபம் கட்டித் தாரீர்!” என்று, சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது, ராஜபாளையம் தொகுதி கழக எம்.எல்.ஏ., எஸ்.தங்கப் பாண்டியன் வேண்டுகோள் விடுத்தார்.

எஸ்.தங்கபாண்டியன்: சட்டப் பேரவையில் இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

ராஜபாளையம் நகர்ப் பகுதியில் திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.என். நேரு:** ராஜபாளையம் நகர்ப்பகுதியில் புதியதாக திருமணம் மண்டபம் அமைப்பதற்கு இடம் இல்லாத காரணத்தினால் அது இப்போது சாத்தியமாக இல்லை.

**எஸ். தங்கப்பாண்டியன்:** ராஜபாளையம் தொகுதி, ஏழையெளிய பொதுமக்கள் மற்றும் விவசாய பெருமக்கள் அதிகம் கொண்ட தொகுதியாகும். எனவே, திருமண மண்டபம் அமைக்க ஏதுவாக, ராஜபாளையம் நகராட்சியில் பச்சமடம் பகுதியில், வார்டு எண் 31, சர்வே எண் 1/57ல் நகராட்சிக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் நிலம் உள்ளது. மேலும் இந்த திருமண மண்டபம் அமைக்க ஏதுவாக, ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்க தயாராக உள்ளேன். மேலும் கூடுதலாக வரும் நிதியை, ராஜபாளையம் நகராட்சி சார்பில் கொடுத்து, மிகப்பெரிய அளவிலான குளிர்சாதன வசதியுடன்கூடிய, திருமண மண்டபம் அமைக்க, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களாக?

**அமைச்சர் கே.என். நேரு:** உறுப்பினர் அவர்கள் இடமும் இருக்கிறது, ஒரு கோடி ரூபாய் நிதியும் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அப்படி அவர் தருகின்ற பட்சத்தில், இதைப்பற்றி ஆராயப்படும்.

**எஸ். தங்கப்பாண்டியன்:** நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ராஜபாளையம் பழைய பேருந்து நிலையம், தற்போது புதுப்பிக்கப்பட்டு, திறப்பு விழா காண தயாரான நிலையில் உள்ளது. மேலும் இப்பேருந்து நிலையம் திறப்பதற்கு தாமதமாவதால், கிராமத்திற்கு செல்லும் பொதுமக்கள் நகரப்பேருந்திற்காக வெயிலில் சாலையில் நின்று காத்திருக்கும் சூழ்நிலை உள்ளதால், புதுப்பிக்கப்பட்ட ராஜபாளையம் பழைய பேருந்து நிலையத்தை, அமைச்சர் அவர்கள் நேரில் வந்து விரைவில் திறக்க முன்வருவார்களா என்பதை, பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** மானியக் கோரிக்கை முடிவுற்றவுடன், நமது உறுப்பினருடன் கலந்துபேசி ஒரு தேதியை குறிப்பிட்டு, உடனடியாக பத்து நாட்களுக்குள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வானூர் சட்டமன்ற தொகுதி, கண்டமங்கலம் மத்திய ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் செ.புஷ்பராஜ், ஆர்.எஸ். வாசன், கு.செல்வமணி, மோகன்தாஸ், குமணன், முருகன், வெற்றிச்செல்வி தெய்வகணபதி, பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.

திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு துறைகளின்கீழ் மாவட்டங்கள் - வட்டங்கள் தோறும்

# போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் செயல்பட்டு வருகின்றன!

## சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் எம்.சி. சண்முகையா எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் பதில்!



**சென்னை,மார்ச்.24-**

**சட்டப் பேரவையில் ஒட்டபிடாரம் தொகுதி கழக உறுப்பினர் எம்.சி. சண்முகையா எழுப்பிய கேள்வியும் அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் அளித்த பதிலும் வருமாறு:**

**எம்.சி.சண்முகையா:** (அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், ஆலந்தல ஊராட்சி, சவலாப் பேரி கிராமத்தை மையமாகக் கொண்டு போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் :** (அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், ஆலந்தல ஊராட்சி, சவலாப் பேரி கிராமத்தை மையமாகக் கொண்டு போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எம்.சி. சண்முகையா:** அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று எனது கோரிக்கையினைப் பதிவு செய்கின்றேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி அதிக கிராமப் புறங்கள் நிறைந்த பகுதியாகும். ஆலந்தல ஊராட்சி, சவலாப்பேரியைச் சுற்றி மாணவ, மாணவியர்கள் போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி பெறு வதற்கு திருநெல்வேலி, தூத்துக்குடி நகரங்களுக்குச் சென்று தனியார் பயிற்சி மையத்தில் அதிகமான கட்டணம் செலுத்தி பயிற்சி பெற வேண்டிய நிலை உள்ளது. ஆகவே, இந்தப் பகுதியை மையமாக வைத்து போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் அமைக்க அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்.

**அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ்:** படித்த இளைஞர்கள் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில், முறையான பயிற்சி அளிக்கும்பொருட்டு, தமிழ்நாடு அரசின் மூலம் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் முதன்முதலில் சென்னை தியாகராயர் கல்லூரியில் தொடங்கப்பட்டது. மேலும், தேவையின் அடிப்படையில் சென்னை மாநிலக் கல்லூரி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. இளைஞர் சக்தி நாட்டின் எதிர்காலம் என்பதை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள் இளைஞர்களைக் கல்வி மற்றும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையச் செய்திடும் வகையில் இந்தியாவிலேயே முதன்முறையாக ‘நான் முதல்வன்’ என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். துணை முதல்வர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் செயல்படும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின்மூலம் தமிழ்நாட்டு இளைஞர்கள் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கு பயிற்சி மற்றும் இதர உதவிகள் வழங்கும் நோக்கில் ‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் போட்டித் தேர்வுகள் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

அதன்மூலம் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள், பயிற்சித் தேர்வுகள் மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது போலவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் தன்னார்வ பயிலும் வட்டங்களில் அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கும் கட்டணமில்லாப் பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் TNPSC Group-IV போட்டித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் 2-1-2025 முதல் தொடங்கப்பட்டு, 44 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். மேலும், TNPSC Group-I போட்டித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் 12-3-2025 முதல் தொடங்கப்பட்டு, 31 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இவ்வாறு பல்வேறு துறைகளின்கீழ் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருவதால், உறுப்பினர் அவர்கள் கோரிய ஒட்டப்பிடாரம் தொகுதியில் தனியாக போட்டித் தேர்வு பயிற்சி மையம் ஏற்படுத்த வேண்டிய தேவை எழவில்லை என்பதை தங்கள் வாயிலாக, உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எம்.சி. சண்முகையா:** திராவிட மாடல் ஆட்சியில் இதுபோன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் இராணுவ வீரர்களின் வீட்டுவரி மீளப்பெறுதலை நீக்கி, விலக்கு அளிக்கப்பட வேண்டும். முன்னாள் இராணுவ வீரர்களுக்கு, மனைவியின் பெயரில் சொத்துக்கள் இருந்தால் வீட்டுவரி செலுத்த வேண்டியுள்ளது. இவர்களுக்கும் விலக்கு அளிக்கப்பட வேண்டும். இரண்டு ஊதியம் பெறும் முன்னாள் இராணுவ வீரர்களுக்கும், வருமான வரி செலுத்தும் முன்னாள் இராணுவ வீரர்களுக்கும் வீட்டுவரி விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்பது அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. இந்தக் கோரிக்கை நிறை வேற்றப்படுமா என்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ்:** முன்னாள் இராணுவ வீரர்கள் செலுத்தும் வீட்டுவரி மீளப்பெறும் திட்டத்தையே நம்முடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒரு முறை வரி விலக்கு வழங்கப்பட்டுவிட்டால், அதன் பிறகு அவர்கள் தங்கள் வீட்டை வேறு யாருக்காவது விற்றபிறகு, வீட்டை வாங்கிய நபர்கள் வரி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடும். மேலும், சொந்த வீடு வைத்துள்ள இராணுவ வீரர்கள் குறைந்த அளவிலேயே உள்ளதாலும், குறைந்த அளவிலேயே அவர்கள் வரி செலுத்துவதாலும், அவர்கள் வரி செலுத்திய பிறகு, அவர்கள் செலுத்திய வரியை விரைவில் மீளப் பெறுவதற்கு, முன்னாள் இராணுவப் படை வீரர்கள் நலத் துறையின்மூலமாக தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், உறுப்பினர் அவர்கள் இன்னொரு கோரிக்கையையும் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து மானியக் கோரிக்கையின்போது விளக்கமாகச் சொல்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பதிலளித்தார்.



விழுப்புரம் நகர சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஆர்.வி.எம் பூபாலன் இல்ல திருமண விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். நகர செயலாளர் இரா.சக்கரை, நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஆலங்குடி சிவ.பாலகிருஷ்ணன்**

**மார்ச் 24 (2007)**



தன்னுடைய இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழக பணியாற்ற தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் ஆலங்குடி வட்டக் கழகத்தின் முதல் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

பாச்சிக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவராகவும் – புதுக்கோட்டை சமஸ்தான கோவில்களின் அறங்காவலர் குழு தலைவர், திருச்சி மாவட்ட நூலக ஆணைக்குழு துணைத் தலைவர், புதுக்கோட்டை அக்ரோ நிலவள வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி, வோளாண்மை கூட்டுறவு வங்கி ஆகியவற்றில் இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

1965 இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாத சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**